# தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு - சென்னை

**பத்திரிகை செய்தி** 10/02/2021

பெறுநர்

**செய்தி ஆசிரியர்**
தினசரி நாளிதழ்கள்/ தொலைக்காட்சி
சென்னை

அன்புடையீர், வணக்கம்

கீழ்கண்ட பத்திரிகை செய்தியினை தங்களது மேலான பத்திரிகையில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழக மின்வாரிய கட்டமைப்பை சிதைக்கும் வாரிய நிர்வாகம்

தமிழக மின்வாரியம் ஒரு சேவைத்துறையான பொதுத்துறை நிறுவனமாகும். 1957-லிருந்து தமிழக அரசினுடைய மின்சார சம்மந்தமான அனைத்து உத்தரவுகளையும் குக்கிராமங்கள் வரை கொண்டு சென்று அரசினுடைய நடவடிக்கைக்கு பெருமை சேர்த்தவர்கள் மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் ஆவர். மின்வாரியத்தின் வளர்ச்சியில் இரவுப்பகலாக தன்னலம் கருதாமல் பொது நலம் கருதி பணியாற்றியவர்கள்.

மத்திய அரசின் மின்சார சட்டத்திருத்த மசோதா 2020-ஐ (தற்போது 2021) தமிழகத்தில் அமலாக்குவதற்கு தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என தெரிவித்து தற்போது வரை மாநில அரசு தொடர்ந்து எதிர்ப்பினை பதிவு செய்து வருகிறது. இந்த சட்டத்திருத்த மசோதா அமலானால் ஏற்படும் பாதிப்புகளை தமிழக அரசு உணர்ந்துள்ளது என்பதை காண முடிகிறது.

ஆனால் அரசின் இந்த நடவடிக்கையை கணக்கில் கொண்டு தமிழக மின்வாரியம் பொதுத்துறையாக நீடித்திட பல்லாயிரக்கணக்கான காலிப்பணியிடங்களை நிரப்பிட தற்போதைய வாரியத்தலைவர், நடவடிக்கை எடுக்காமல், தனியார் மயப்படுத்தும் நோக்கத்தில் வாரிய பணிகளை **Works Contract** மற்றும் அவுட் சோர்சிங் முறையில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். கடந்த 21.12.2020 அன்று தொழிலாளர்கள்,பொறியாளர்கள், மற்றும் அலுவலர்கள் தன்னெழுச்சியாக நடத்திய காத்திருப்பு போராட்டத்தின் விளைவாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டு தொழிலாளர்கள், பொறியாளர்கள் உணர்வுகளை புரிந்து கொண்டு விநியோக பிரிவுகளில் விடப்பட்ட அவுட் சோர்சிங் உத்தரவையும், 5 துணை மின் நிலையங்களை பராமரிக்கவும்,

இயக்கவும் தனியாருக்கு விடப்பட்ட உத்தரவுகளையும் ரத்து செய்ய வாரியத்தலைவருக்கு உத்திரவிட்டு போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். இது தமிழக அரசின் மேல் தொழிலாளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

மின்வாரியத்தில் 52,000-ம் காலிப்பணியிடங்கள் இருக்கின்ற நிலையில் கூடுதல் பணிகளை பணிச்சுமையோடு ஊழியர்கள் செய்து வருகின்றனர். ஆரம்பக்கட்ட பதவிகளான களஉதவியாளர் (ITI) 2900, உதவிப்பொறியாளர்கள் 600, கணக்கீட்டாளர்கள் 1300, தொழிற்நுட்ப உதவியாளர்கள் 300, இளநிலை உதவியாளர்கள் 500 ஆகிய பணிகளுக்கு தேர்வு செய்வதாக அறிவித்து ஆண்டுகள் கடந்து விட்டது.

அதே போல, கேங்மேன் பணியாளர்களை எடுப்பதும் பல ஆண்டுகளாக மின்வாரியத்தில் பணியாற்றிய ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டு முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தினக்கூலியாக ரூ.380/- வழங்கிட நடவடிக்கை எடுக்காமல், அவுட் சோர்சிங் முறையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தானே புயல், சென்னை பெருவெள்ளம், கஜா புயல், ஒக்கி புயல் போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் மின்வாரிய பணியாளர்களின் பணி அனைவராலும் பாராட்டப்பட்டது. அரசு நிர்ணயித்த கால அளவைவிட முன்கூட்டியே பணிகளை செய்து மக்களுக்கு தடையில்லா மின்சாரத்தை வழங்கியவர்கள் தமிழக மின்வாரிய பணியாளர்கள். சமீபத்தில்கூட 2020 நவம்பர் 26-ல் மத்திய அரசின் தனியார்மய கொள்கையை எதிர்த்து மின்வாரிய தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்திருந்த நிலையிலும், தமிழகத்தை நிவர் புயல் தாக்கும் என அறிவிப்பு வந்ததை அடுத்து மக்களின் நலன் கருதி, வேலை நிறுத்தத்தை விலக்கிகொண்டு நிவர் புயல் பணிகளில் ஈடுபட தயாராக இருந்தவர்கள் மின்வாரிய பணியாளர்கள்.

மின்வாரியத்தில் காலிப்பணியிடங்களை நிரப்பாமல் கூடுதல் பணிச்சுமையோடு பணியாற்றி வரும் பணியாளர்களின் நிலையை கணக்கில் கொள்ளாமல் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கும் படித்த, இளைஞர்களின் கனவுகளையும், மின்வாரிய நிர்வாகம் தட்டிப்பறிக்கிறது.

தமிழக மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தியை முழுவீச்சில் துவக்கி அதன் பின் தேவைக்கேற்ப மின்சாரத்தை கொள்முதல் செய்வது, சரியான நடவடிக்கையாக அமையும். ஆனால் பழமை வாய்ந்த தூத்துக்குடி, மேட்டூர் போன்ற இடங்களில் உள்ள அனல்மின் நிலையங்களை நவீனப்படுத்த வாய்ப்புகள் இருந்தும் நவீனப்படுத்தாமல் அங்கு உற்பத்தியை நிறுத்தி தனியாரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவதால் மாநில மின்சார வாரியம் கடும் நிதி நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மின்சார விநியோகம், மின் உற்பத்தி ஆகியவை தனியாரை நோக்கி செல்லுமேயானால் மின்சாரம் அத்தியாவசிய பொருட்களிலிருந்து சந்தைப்பொருளாக மாறுவதோடு மக்கள் அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்க நேரிடும்.

இது போன்ற தவறான நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன் புதிய மின் உற்பத்தி திட்டங்களில் பணியாற்றி வரும் ஊழியர்கள்,பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களை பதவியிறக்கம் செய்தும் மற்றும் பணியிடமாற்றமும் செய்து உத்தரவுகள் வெளியிடுகிறார். புதிய உற்பத்தி திட்டங்களில் கட்டுமான பணிகளில் தொய்வு ஏற்படுவதுடன், ஊழலுக்கும் வழிவகுக்கும் என சுட்டிக்காட்டிய பின்பும் வாரிய நிர்வாகம் உணர மறுக்கிறது. அதே போல செயலகப்பிரிவு, நிர்வாகப் பிரிவு போன்றவற்றில் இதே நடவடிக்கையை எடுத்து வருகிறார்.

இது தொடர்பாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியும் வாரியத்தலைவரின் நடவடிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை.

தொழிற்சங்கங்கள் இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி கடந்த டிசம்பர் 21-ல் நடத்திய காத்திருப்பு போராட்டத்திற்காக தொழிற்சங்கங்களின் அங்கீகாரத்தையும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் உரிமையையும் ஏன் ரத்து செய்யக்கூடாது என காரணம் கேட்கும் குறிப்பாணையை வாரிய நிர்வாகமே வழங்கி, அதற்கு மறுநாளே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரில் வாரிய நிர்வாகம் தொழிற்சங்கங்களின் மீது தவறான வார்த்தையை (Erring Union) பிரயோகித்து அந்த உத்தரவை ரத்து செய்தனர். ரத்து செய்த உத்தரவில் உள்நோக்கத்தோடு தொழிற்சங்கங்களை அவமதிக்கின்ற வகையில் தவறான வார்த்தையை பயன்படுத்தி உத்தரவை ரத்து செய்தது தொழிற்சங்கங்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் கடும் கொந்தளிப்பை உருவாக்கி உள்ளது.

இதுவரை மின்வாரிய நிர்வாகத்தில் தலைவர் மற்றும் மேலாண்மைய இயக்குநராக பதவி வகித்த மூத்த **IAS** அதிகாரிகள் தொழிற்சங்கங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்பார்கள். இது மின்வாரியத்தின் 63 ஆண்டுகால வளர்ச்சிக்கு உதவியது. ஆனால் தற்போது மின்வாரியத்தில் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ள மூன்று **IAS** அதிகாரிகள், அனுபவம் வாய்ந்த இயக்குநர்கள் மற்றும் மூத்த பொறியாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமலும், தொழிற்சங்கங்களின் ஆலோசனையை புறந்தள்ளியும் மின்வாரிய கட்டமைப்பை சீர்குலைத்து வருகிறார்கள்.

எனவே, தமிழக அரசுக்கு அவப்பெயரை உருவாக்கி மின்வாரியத்தின் கட்டமைப்பை சீர்குலைத்து வரும் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.பங்கஜ் குமார் பன்சால் இ.ஆ.ப அவர்களையும், இணை மேலாண்மை இயக்குநர் திரு. வினித் இ.ஆ.ப அவர்களையும் மின்வாரியத்தின் நிர்வாகத்திலிருந்து இடம் மாற்றம் செய்து தொழில் அமைதி காத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் வேறு வழியில்லாமல் காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு மின்வாரிய பணியாளர்கள் செல்ல நேரிடும் என்பதை தமிழக அரசின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

---

இவண்-

தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு - சென்னை